# NEWSPAPER CLIPPINGS

| MEDIA | TAMIL NESAN | DATE | 24 OCT 2013 (THURS) |
|---|---|---|---|
| PAGE / SECTION | 7 / CITY NEWS | READERSHIP | 120,000 |

பெட்டாலிங் ஜெயா ரோட்டரி கிளப் ஏற்பாட்டில்

# தாதியர்கள் கௌரவிக்கப்பட்டனர்



பெட்டாலிங் ஜெயா ரோட்டரி கிளப் துணைத் தலைவர் டத்தோஸ்ரீ டாக்டர் கிருஷ்ணமூர்த்தி செய்தியாளர்களிடம் விளக்கம் கூறுகின்றார்.

**(எ. அண்ணாமலை)**
**கிள்ளான், அக். 25-**

1961 ஆண்டு சுல்தான் ஷராபுடின் இட்ரிஸ் ஷா அவர்களால் பெட்டாலிங் ஜெயா ரோட்டரி கிளப் தோற்றுவிக்கப்பட்டது. அன்றிலிருந்து, கடந்த 52 ஆண்டுகளாக பொதுமக்களின் மீது அக்கறை கொண்டு, பல விதத்திலும் உதவியும் வருகின்றோம் என பெட்டாலிங் ஜெயா ரோட்டரி கிளப் தலைவர் கேப்டன் எச்.எஸ். டரன் கூறினார்.

தொடர்ந்து அவர் பேசுகையில், சிலாங்கூர் மாநிலத்தில் மட்டும் 56 இடங்களில் சிறு நீரக சுத்திகரிப்பு மையங்கள் அமைத்திருப்பதாகவும், அதில் 300 க்கும் மேற்பட்டவர்கள் தாதியராகப் பணிபுரிகின்றார்கள். எங்களால் முடிந்த மட்டும் மருத்துவ மனையில் தாதியராகப் பணிபுரியும் ஐவருக்கு இம்முறை சிறந்த வேவைக்கான விருந்து வழங்கி சிறப்பித்து வருவதாக அவர் குறிப்பிட்டார்.

கடந்த 2011 முதல்2012 ஓராண்டுக்குள் 25,688 பொதுமக்கள் சிறு நீரகக் கோளாறுக்கு, பாதிப்புக்குள்ளாகி இருக்கின்றார்கள். நம்நாட்டில் ஆண்டுதோறும் இவ்வியாதியினால், 9லிருந்து 10 சதவிகிதம் பேர் பாதிப்புக்குள்ளாகி வருவதாக சுகாதார அமைச்சு கூறியுள்ளதாகவும் அவர் சொன்னார்.



சிறப்பு விருதினை கேப்டன் டரனிடமிருந்து பெறுகிறார் பந்திங் சுமதி த/பெ சுப்பிரமணியம்.



பெட்டாலிங் ஜெயா ரோட்டரி கிளப் தலைவர் கேப்டன் எச்.எஸ்.. டரன் அவர்தம் துணைவியார் திருமதி பிரிசில்லா எல்பெட்.

ஆதலினால், இவ்வாண்டு உலகத்தொழில் திறன் மாதத்தை முன்னிட்டு, 5 அரசாங்க மருத்துவமனை தாதியர்களுக்கு, இம்முறை Anugerah Perkhidmatan Vokasinal Negeri Selangor எனும் விருதினை, பெட்டாலிங் ஜெயா ரோட்டரி கிளப், சுபாங் ஜெயாவில் Grand dorsett ஹோட்டலில் விருந்து வழங்கி கௌரவிப்பதாகவும் கேப்டன் எச்.எஸ். டரன் குறிப்பிட்டார்.



சிலாங்கூர் மாநில தொழில் கல்வி சேவை எனும் விருதினை பெற்றவர்களுடன் பெட்டாலிங் ஜெயா ரோட்டரி கிளப் தலைவர் கேப்டன் எச்.எஸ். டரன்.

இவர்கள் ஐவரும் மக்களின் நலனுக்காக, அயராது பாடுபட்டதற்காக இவ்வாண்டு இவர்களுக்கு உயரிய விருது வழங்கப்பட்டு சிறப்பிக்கப்பட்டனர்.

நான் இரண்டாவது பிள்ளைக்கு, தாயாகப்போகும் வேளையில், மக்களுக்காக வைத்தியம் பார்த்தாலும் அதனால், எவ்வளவுதான் பணம் கிடைத்தாலும், இது போன்ற பாராட்டுதான் எங்கள் நெஞ்சுக்கு நிம்மதி தருகின்றன என்றார் திருமதி சுமதி புவனேஸ்வரன்.

பெட்டாலிங் ஜெயா ரோட்டரி கிளப் துணைத் தலைவர் டத்தோஸ்ரீ டாக்டர் கிருஷ்ணமூர்த்தி பேசுகையில், வரும் 26-10-2013 சனிக்கிழமை பெட்டாலிங் ஜெயா, விவேகானந்தா தமிழ்ப்பள்ளியில் 60 மாணவர்களுக்கு தீபாவளி பண்டிகையை முன்னிட்டு காலை 9 மணிக்கு, அன்பளிப்புப் பொட்டலங்களை வழங்குவதாகவும், பல முதியோர் இல்லங்களுக்கு ஆண்டுதோறும் இம்மாதிரியான பரிசுப் பொருட்களை வழங்கி வருவதாகவும் அவர் செய்தியாளர்களிடத்தில் கூறினார்.